


நகர் ஊரமைப்பு துறை(DTCP)

நாமக்கல் மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்

எருமைப்பட்டி ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், மேட்டுப்பட்டி ஊராட்சி , மேட்டுபட்டி அக்ரஹாரம் கிராமம் ச.எண் - **280**-ல் **TMC NAGAR** அமையம் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு : 1:400 (அ) **1" : 33'0"**

இணையதள எண் : **01VJMOTL/58826/2025/TCP**

I) குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பளவு	:	4.6436 ஏக்கர் (அ) 18800.00 ச.மீட்டர் **(As per Patta)**
மனைப்பிரிவு எல்லை	:	
நிலையிலுள்ள சாலை	:	
தொலைத்தொடர்பு பயன்பாடு	:	
கோரிய மனைகள்	:	95
ஒதுக்கிய மனைகள்	:	95 **(24 - EWS** மனைகள் உட்பட)
கடைக்கு ஒதுக்கப்பட்ட மனைகள்	:	04 - 14 (11 மனைகள்) .....
கடை மனைகளின் பரப்பு	:	1664.38 ச.மீட்டர்

II)பொது ஒதுக்கீடுகள்:

(உத்தேச சாலை பரப்பளவு நீங்களாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டது)

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

உத்தேச சாலைகளின் பரப்பளவு(மூலை முடக்குகள் உட்பட) : 6347.57 ச.மீட்டர் ..... **(Doc No - 87/2026)**

பூங்கா பரப்பு : 1252.92 ச.மீட்டர் (10.04 %) **(Doc No - 87/2026)**

பொது உபயோகம்**(TNCDBR-47(8)**-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட 1% ஒதுக்கீடு:

I. உள்ளாட்சிக்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு : 65.85 ச.மீட்டர் (0.53 %) ..... **(Doc No - 87/2026)**

II. TANGEDCO -க்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு : 63.52 ச.மீட்டர் (0.51 %) ..... **(Doc No - 64/2026)**

III) ஒதுக்கீடுகள்:

I. EWS மனைகளின் பரப்பளவு : 1310.16 ச.மீட்டர் (10.51 %)

II. EWS மனைகளின் எண்கள் : **45 - 50, 64 - 76 & 89 - 93**

மூலை முடக்கு:- 12.0மீ அகல சாலை வரை 1.52மீ **X** 1.52மீ விடப்பட்டது.

IV) நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
2. அரசாணை எண் 181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள்.19.12.2020, வழிகாட்டி மதிப்பின்படி தொகையை செலுத்தப்பட வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்,' ஆணையர், அவர்களால் இரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்புர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி,' திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில்கிரயப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாருருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் **6' X 4'** அளவிலான நிரந்து தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கதல்ல.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நிறுவைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிங்கள் கட்டப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே **HT LINE, LT LINE** மற்றும் **TELEPHONE LINE** செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
12. உத்தரவு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் (மு) மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
13. அரசாணை எண் 18, 16 நகர். (மு) கு.வ.துறை, நாள்.04.12.2019 (மு) 31.01.2020-ன் விதிகள் அனைத்தும் பொருந்தும்.
14. அரசாணை எண் 155-ன் படி தொலைத்தொடர்பு கம்பிகளுக்கு இடமளிக்கும் வகையில் குறைந்தபட்சம் 0.15மீ கொண்ட வெற்றுக் குழாய்கள் (பெரிய அளவிலான **HUME** குழாய்கள் / **HDPE** குழாய்கள்) முனைப்பிரிவின் வெளிப்புற விளிம்புகளில் அமைக்கப்பட வேண்டும்.
15. அரசாணை எண் **47 / 6 (b)** -ன் படி நிலத்தின் கட்டிடம் மற்றும் பயன்பாடு தளவமைப்பை அனுமதிக்கும் போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும். வணிக, நிறுவன தொழில்துறை அல்லது பிற பயன்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட இடம் ஒதுக்கப்பட்ட நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். கடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மனைகளை கடைகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தும் பொழுது நகர் ஊரமைப்பு துறையின் அனுமதி பெற வேண்டும்.

APPROVAL No : SWP / DTCP / NAMAKKAL / LAYOUT No : 12/2026

திரு.ராசேந்திரன்
அளவர் / உதவி வரைவாளர்

திரு.வெ.உத்தரவேல்
வரைவாளர் நிலை-III

Signature valid
Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2026.01.14 16:18:41

திரு.வெ.உத்தரவேல்
மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை- II

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Namakkal
Date:2026.04.02 14:30:06

(E-Sign)
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.